செ.வெ.எண்: 32 நாள்: 17.10.2016

# பத்திரிகைச்செய்தி

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி தாலுகா, எரிச்சி கிராமத்தில் பிறந்து இரண்டு நாட்கள் ஆன நிலையில் ஆண் குழந்தை 18.08.2015 அன்று ஆதரவற்ற நிலையில் கண்டெடுக்கப்பட்டது. இந்த ஆண் குழந்தைக்கு சித்தார்த் என்று பெயரிடப்பட்டு புதுக்கோட்டை மாவட்ட குழந்தைகள் நலக் குழுவின் மூலம் மதுரை மாவட்ட குழந்தைகள் நலக்குழுவின் பாதுகாப்பில் அழகுசிறை, கிளாரீசியன் கருணை இல்ல தத்து நிறுவனத்தில் தங்க வைத்து பராமரிக்கப்பட்டு வருகின்றது. மேலும் இக்குழந்தை சித்தார்த்-ஐ பற்றிய விபரங்கள் மற்றும் பெற்றோர் அல்லது உறவினர்கள் பற்றிய தகவல்கள் தெரிந்தால் ஏழு நாட்களுக்குள் மதுரை மாவட்ட குழந்தைகள் நலக் குழுமத்திற்கு தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் அவ்வாறு தகவல் தெரிவிக்காவிடில் இக்குழந்தையை சட்டப்படியாக தத்து கொடுப்பதற்கு தடையில்லா சான்று வழங்கப்படும் என்பதனை இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. இக்குழந்தை பற்றி தகவல் தெரிந்தால் பொதுமக்கள் கீழ்கண்ட முகவரிக்கு தெரிவிக்கலாம்.

தலைவர், குழந்தைகள் நலக் குழு, மதுரை மாவட்டம்,
21-22 கென்னட் நகர், முத்துப்பட்டி, மதுரை ___ 625003.
கைபேசி எண: 9443335630

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**